**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31.07.2024 புதன் கிழமை நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திருமதி.பா. கவிதா,M.Com.,**
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | இந்நகராட்சிகுட்பட்ட வார்டு எண் 14 மேட்டுத் தெருவிலுள்ள திருக்குளத்தின் மேல்கரையில் அமைந்துள்ள வரதராஜ பெருமாள் கோவில் மனைப்பிரிவு புல எண் 84 மற்றும் 85–ல் உள்ள பொது உபயோகத்திற்கான இடத்தில், இந்நகராட்சிக்கு என்று அறிவுசார் மையம் கட்டுவதற்கு இடம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், இந்நகராட்சி நகர்மன்றத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் ஆட்சேபனை தெரிவித்து, மேற்படி அறிவுசார் மையத்தினை நகரத்தின் மையப்பகுதியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அமைந்துள்ள திருவாரூர் சாலை ஏ.எஸ்.வி.ஆர்.நகரிலுள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காவின் ஒரு பகுதி இடத்தில் அமைக்கலாம் என ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதின் அடிப்படையில், இந்நகராட்சிக்குட்பட்ட திருவாருர் சாலை வார்டு–பி, பிளாக் 5, நகரளவு எண் 7/17 பகுதி, 7/23–ல் 2102 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காவிற்கான இடத்தில் 350 ச.மீ. பரப்பளவில் அறிவுசார் மையம் கட்டுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | 389 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இது தொடர்பான மதிப்பீடு மற்றும் திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பிடவும், இது தொடர்பான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 854/2023/இ1) | | |
| 2 | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் 2019-20, 2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் நிதி, வடிகால் நிதி கணக்குகள் மீதான ஐந்தொகை குறிப்பும், வரவு-செலவு விபரம் ஆரம்ப இருப்பு மற்றும் இறுதி இருப்பு விபரம் அளித்திட தணிக்கை பணியாளர்கள் தொடர்பான மொத்த ஊதிய தொகையில் 50% சதவீதம் மற்றும் பயணப்படிகளுடன் தணிக்கை கட்டணமாக ரூ.274509/- அரசு கணக்கில் செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண். 78/2007/பி2</u> | 390 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது |
| 3 | இந்நகராட்சியின் 2024-25ஆம் ஆண்டிற்கான அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான படிவங்கள், பதிவேடுகள், கணிணி உபயோக பொருட்கள் கேட்பு அறிவிப்புகள் மற்றும் எழுதுபொருட்கள் வாங்குவதற்கு நிலுவை மற்றும் நடப்பாண்டிற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.5,00,000/-இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம். | 391 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து அலுவலக தேவைக்கேற்ப வாங்கி கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.1536/2018/பி3** | | |
| 4 | தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.47/2024/அ2 நாள் 22.05.2024ன்படி கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனத்திற்கு 2024–25 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சியின் பங்குத் தொகையாக ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண். 1312/2024/சி1 | 392 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது |
| 5 | தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1254/2023/இ3 நாள் 08.07.2023ன்படி தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்திற்கு தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு, மேற்படி அலுவலகத்தில் இயங்கி வரும் 24x7 தொலைபேசி உதவி மையத்தில் பணியாளர் பணியாற்றிய காலத்திற்கான ஊதியத்திற்கு, இந்நகராட்சி பங்கு தொகையாக ரூ.27,100/–யை (ரூபாய் இருபத்தி ஏழாயிரத்தி நூறு மட்டும்) வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: | 393 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(**<u>ந.க.எண். 1591/2024/சி1</u>** | | |
| 6 | இந்நகராட்சியில் கணிணி உதவித் திட்ட அமைப்பாளர் 30.04.2024ல் ஓய்வுபெற்றுவிட்டார். கணிணி தொழில் நுட்ப பணியாளர் (Data Entry Operator) ஒருவரும் இல்லை. நகராட்சியில் அனைத்துப் பணிகளும் கணிணிமயமாக்கப்பட்டுள்ளதால், இதனால் தொழில் நுட்ப பிரிவில் உடனுக்குடன் பணிகள் செய்ய சுணக்கம் ஏற்படுகிறது. எனவே, நிர்வாக நலன் கருதி மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதிய அட்டவணைப்படி (Schedule)ல் தெரிவித்துள்ளவாறு, கணிணி பிரிவிற்கு தொழில்நுட்ப கல்வி பயின்ற ஒருவரை நியமிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **<u>அலுவலக குறிப்பு</u>**:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மே–2024 மற்றும் ஜுன்–2024 மாதங்களுக்கு ஊதியம் வழங்கியதையும் மற்றும் மேற்படி தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(**<u>ந.க.எண். 1022 /2024/சி1</u>** | **394** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |
| 7 | இந்நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தினை சுற்றி (வட பகுதி) சுற்றுசுவர், அமைப்பது தொடர்பாக திரு.நைனா முஉறம்மது மற்றும் திருமதி.சாந்தி என்பவர்களால் இந்நகராட்சிக்கு எதிராக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருத்துறைப்பூண்டி வழக்கு எண் 24/2015ன் மூலம் தொடுக்கப்பட்ட வழக்கில் இந்நகராட்சி ஆணையர் சார்பாக வழக்கறிஞர் திரு.ஜி.தர்மராஜ் அவர்கள் ஆஜராகி வழக்கு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/– வழங்க | **395** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.ஜி. தர்மராஜ் அவர்கள் பட்டியல் வழங்கியுள்ளார். எனவே மேற்படி பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>__அலுவலக குறிப்பு__:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(__ந.க.எண். 1364/2015/இ1__ | | |
| 8 | திருத்துறைப்பூண்டி நகராட்சி தேளிக்குளம் பிள்ளையார் கோவில் சாலையின் தென்பகுதியில் மீன் கடை வளாகத்தின் வடப்பகுதியில் திரௌபதியம்மன்கோவில் வரை உள்ள தார் சாலையை புதுப்பித்தல் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.70,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>__அலுவலக குறிப்பு__:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(__ந.க.எண்.1391/2024/இ1)__ | **396** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |
| 9 | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவிற்கு அத்தியாவசிய பணிகள் உபயோகத்திற்காக நீர்த்த சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர், பினாயில் மற்றும் தளவாள சாமான்கள் ,வரும் வடகிழக்கு பருவமழை காரணமாக சாக்குகள் வாங்குவதற்கும் பொதுசுகாதார அவசர | **397** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்** |

<table>
<tr>
<td></td>
<td>அவசியம் கருதி உத்தேச செலவினமாக ரூ.10,00,000/−இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u>:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(<u>ந.க.எண். 1015/2006/எச்1</u></td>
<td></td>
<td>பட்டது</td>
</tr>
<tr>
<td>10</td>
<td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.61/2017/மாதி3 நாள்.20.02.2024ன்கீழ் திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை போக்கும் விதமாக குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்கு வறட்சி நிவாரண நிதி 2024−25ன்கீழ்வார்டு எண்.6 வேளூர் பாலம் முதல் அரியலூர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வரை பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு 10.07.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம் குறைவு/அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>M/S.RM Engineering Works, Coimbatore</td><td rowspan="2">2000000.00</td><td>0.05% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>Thiru.R.Tamilselvan, Tanjavure</td><td>1.25% அதிகம்</td></tr>
</table>
</td>
<td>398</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மதிப்பீட்டை விட 0.05% குறைவானதாகவும் உள்ள M/S.RM Engineering Works, Coimbatoreஎன்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. வரிசை எண்.1ல் கண்டுள்ள M/S.RM Engineering Works, Coimbatore என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br>3. கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை போக்கும் விதமாக பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br><u>ந.க.எண். 494/2024/இ1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>11</td>
<td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.61/2017/மாதி3 நாள்.20.02.2024ன்கீழ் திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை போக்கும் விதமாக குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்குவறட்சி நிவாரண நிதி 2024–25ன்கீழ்இந்நகராட்சி எல்லைக்குள் 6 இடங்களில் ஆழ்துளை குழாய் கிணறு, சிறுமின் விசை பம்ப் மற்றும் மோட்டார் அறை அமைத்தல் பணிக்கு 10.07.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம் குறைவு/அதிகம்</th></tr>
</table>
</td>
<td>399</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>1.</td><td>திரு.வி.சிதம்பரம்</td><td rowspan="2">2000000/-</td><td>0.05% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.எஸ்.பாலசுப்பிர மணியன்</td><td>4.78% அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மதிப்பீட்டை விட 0.05% குறைவானதாகவும் உள்ள திரு.வி.சிதம்பரம், திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:
<ol>
<li>மன்றம் அனுமதி வழங்கலாம்.</li>
<li>வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.வி.சிதம்பரம், திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.</li>
<li>கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை போக்கும் விதமாக பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.</li>
</ol>
<u>ந.க.எண். 494-1/2024/இ1</u>
</td><td></td><td></td></tr>
<tr><td>12</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 2105/2024/பி1 (KNMT-FY 2024-25-11thCPSMC-DMA) வ.எண்.59 நாள். 26.06.2024ன்கீழ் திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2024-25ன்கீழ் வார்டு எண்.21 சிங்களாந்தி மாரியம்மன் கோவில்குளம் மேம்பாடு செய்யும்</td><td>400</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | பணிக்கு 25.07.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு | | |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் குறைவு/அதிகம் |
|---|---|---|---|
| 1. | திரு.பி.கண்ணன் | 4700000/- | 0.08% குறைவு |
| 2. | திரு.எஸ்.மாரியம்மாள் | | 1.00% அதிகம் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மதிப்பீட்டை விட 0.08% குறைவானதாகவும் உள்ள திரு.பி.கண்ணன், திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.பி.கண்ணன், திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

<u>ந.க.எண். 856/2024/இ1</u>

<table>
<tr>
<td>13</td>
<td>
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 2105/2024/பி1 (KNMT-FY 2024-25-11thCPSMC-DMA)வரிசை எண்.94நாள். 26.06.2024ன்கீழ் திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT)2024-25ன்கீழ் வார்டு எண்.9 திருக்குளம் கிழக்கு கரையில் பூங்கா அமைக்கும் பணிக்கு 25.07.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம் குறைவு/அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு.பி.கண்ணன்</td><td rowspan="2">1700000/-</td><td>0.03% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.எஸ்.மாரியம்மாள்</td><td>1.90% அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மதிப்பீட்டை விட 0.03% குறைவானதாகவும் உள்ள திரு.பி.கண்ணன், திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.பி.கண்ணன், திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண். 857/2024/இ1</u>
</td>
<td>401</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>14</td>
<td>
நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.28484/2022/DO1 நாள்.15.03.2024ன் கீழ் திருத்துறைப் பூண்டி நகராட்சியில் SBM(U) 2.O–UWM திட்டத்தின்கீழ் 3 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிக்கு 10.07.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>M/S.Dhanshith Trading Agencies, Trichy</td><td rowspan="2">99000000/-</td><td>0.12% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/S.Abbundu Interiors and Construction Pvt Ltd, 22, Old no.78 First Floor,<br>$2^{nd}$ Main Road, Gandhi Nagar,<br>Adayar,<br>Chennai–600 020</td><td>0.53% அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மதிப்பீட்டை விட 0.12% குறைவானதாகவும் உள்ள M/S.Dhanshith Trading Agencies, Trichy என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:
<ol>
<li>மன்றம் அனுமதி வழங்கலாம்.</li>
<li>வரிசை எண்.1ல் கண்டுள்ள M/S.Dhanshith Trading Agencies,</li>
</ol>
</td>
<td>402</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>Trichy என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br><u>ந.க.எண். 3112/2024/இ1</u></td><td></td><td></td></tr>
<tr><td>15</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.61/2017/மாதி3 நாள்.20.02.2024ன்கீழ் திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை போக்கும் விதமாக குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்கு குடிநீர் உபகரணங்கள், பகிர்மான குழாய் இல்லாத இடங்களில் புதிதாக பகிர்மான குழாய் பதித்தல், மின் மோட்டார்கள் மற்றும் பம்புகள் விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம்ரூ.10.00 இலட்சத்திற்கும், மேலும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி 14.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம் குறைவு/அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்</td><td rowspan="2">1000000/-</td><td>0.01% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திருமதி.எஸ்.மாரியம்மாள்</td><td>2.43% அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மதிப்பீட்டை விட 0.01% குறைவானதாகவும் உள்ள M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:<br>
1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>
2. வரிசை எண்.1ல் கண்டுள்ள M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்தின்</td><td>403</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br>3. கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை போக்கும் விதமாக பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>**<u>ந.க.எண். 621/2024/இ1</u>** | | |
| **16** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொறியியல் பிரிவில் பயன்படுத்தி வந்த பிரிண்டர் பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. எனவே மதிப்பீடுகள், அறிக்கைகள் மற்றும் இதர ஆவணங்கள் பிரிண்ட் எடுக்க முடியாமல் உள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி பொறியியல் பிரிவிற்கு புதிதாக 2 எண்ணிக்கையிலான பிரிண்டர் மற்றும் டோனர் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 1098/2024/இ1</u>** | **404** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |
| **17** | திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட/திட்ட அனுமதி கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு கட்டிட உரிமையாளரின் சுய சான்றின் அடிப்படையில் 2500 சதுர அடி பரப்பளவு உள்ள மனையில் 3500 ச.அடி வரையிலான தரைத்தளம் அல்லது தரைத்தளத்தின் கூடிய முதல் தளம் குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட இணையவழி (Single Window Portal) கட்டிட அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய | **405** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | ஒருங்கிணைந்த கட்டிடங்களை நிர்ணயம் செய்து வரப்பெற்ற அரசாணை நிலை எண் 94 ந.நி.(ம) கு.வ. த (நநி.1)துறை நாள் 18.07.2024 மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. அரசாணையில் தெரிவிக்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 மற்றும் தமிழ் நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023ன்கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாம்.<br>3. இது குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் முக்கிய இடங்களில் விளம்பர பலகைகள் அமைக்கவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 860/2024/எப்1** | | |
| **18** | திருத்துறைப்பூண்டி நகராட்சிப் பகுதியிலுள்ள எரிவாயு தகன மேடைக்கு (Gasifier Crematorium) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் திருவாரூர் அவர்களின் உத்தரவு எண்.F0269TVR/GS/DEE/TNPCB/TVR/W/2024 DATED 07.05.2024–ன்படி மார்ச்–31 வருடம் 2025 வரைக்கும் அனுமதி வாங்குவதற்கு ஆலோசனை கட்டணம் (Consultancy Charges) ரூ.20,000/– வழங்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** | **406** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியிலிருந்து தொகை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண். 1319 /2024/எப்1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>19</td>
<td>கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024-25ன்கீழ் திருத்துறைப்பூண்டி நகராட்சி பழைய பேருந்து நிலையம் அகற்றப்பட்டு காலியாக உள்ள இடத்தில் புல எண்.163/3ல் புதியதாக வணிக வளாகம் கட்டும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை மற்றும் அதற்கான வரைபடங்கள் தயார் செய்து வழங்குவதற்கு 08.05.2024 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்/நிறுவனத்தின் பெயர்</th><th>விலை விகிதம் மதிப்பீட்டில்</th></tr>
<tr><td>1.</td><td>Pavithra Associates Civil Engineer & Contractor, Chennai</td><td>1.66%</td></tr>
<tr><td>2.</td><td>Prorata in Propotion Civil Engineer, Architec,<br>B-4/2, Ganesh Vilas,<br>15 Karpagambal Nagar 2nd Street,<br>Ramapuram, Chennai-89</td><td>1.80%</td></tr>
<tr><td>3.</td><td>Design Spectrum Architects Engineer Interior Designers, N.42, Labour School Street, Anakaputhur, Chennai-70</td><td>2.00%</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Pavithra Associates Civil Engineer & Contractor, Chennai அவர்களின்</td>
<td>407</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | விலைப்புள்ளியினை ஏற்றதைமன்றம்பார்வையிட்டுபதிவுசெய்யலாம்.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் பார்வையிட்டுபதிவு செய்யலாம்.<br>2. வரிசை எண்.1ல் கண்டுள்ள Pavithra Associates Civil Engineer & Contractor, Chennai என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>4. மேற்படி பணிக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை மதிப்பீட்டில் 1.66% வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 826/2024/இ1** | | |
| **20** | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 காலராக் கொட்டகை குறுக்கு சாலையில் தரைமட்டத்தில் அமைந்துள்ள பழைய RCC கல்வெட்டினை அகற்றிவிட்டு புதிதாக தரைக்கு மேல் மழைநீர் வடியும் வகையில் கல்வெட்டு அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.100000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவு தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 1643/2024/இ1** | **408** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |
| **21** | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 வடபாதி வேதாத்திரி நகர் குறுக்கு சாலை (Unicode No.103006R159), சாலை மேம்பாட்டு திட்டம் 2024-25ன்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு | **409** | **அலுவலக குறிப்பு** |

| | | | |
|---|---|---|---|
| | மண்சாலை சிமெண்ட் சாலையாக அமைக்க இருந்த நிலையில் நிலவியல் மற்றும் அளவீடு பிரச்சினை காரணமாக மேற்படி பணி மேற்கொள்ள இயலவில்லை. எனவே மேற்படி சாலைப் பணியினை ரத்து செய்ய மன்றத்தின்அனுமதிக்குவைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திட்டப் பணிகள் பாதிப்பு அடையாத வகையில் மேற்படி வடபாதி வேதாத்திரி நகர் குறுக்கு சாலை (Unicode No.103006R159) ரத்து செய்ய மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 2767-6/2024/இ1 | | **அனுமதிக்கப் பட்டது** |
| **22** | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 மீனாட்சி வாய்க்கால் மில் தெருவில் புல எண்.25/3ல் தூய அந்தோணியார் அரசு உதவி பெறும் துவக்கப் பள்ளி இயங்கி வருகிறது. மேற்படி பள்ளிக்கு செல்வதற்கு சரியான பாதை இல்லாததால் பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி வலது புற வாய்க்கால் ஓரத்தில் உள்ள பாதையை பள்ளிக்கு செல்லும் பாதையாக பயன்படுத்திக் கொள்ள பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். அதனை ஏற்று பொது மக்களின் சார்பாக நமக்கு நாமே திட்டத்தின் கீழாக பொதுமக்களின் பங்களிப்பு தொகை ரூ.660000/- மேற்படி பள்ளி நிர்வாகம் செலுத்த சம்மத கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு பொதுப்பணித் துறையிடமிருந்து தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது. எனவே நமக்கு நாமே திட்டத்தின் கீழாக வாய்க்கால் கரையில் தடுப்புசுவர் கட்டுவதற்கான பணியினை எடுத்துக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம். | **410** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |

<table>
<tr><td></td><td>2. நமக்கு நாமே திட்டத்தின்கீழ் தடுப்பு சுவர் கட்டும் பணிக்கு அனுமதி கோரி முன்மொழிவுகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண். 150/2024/இ1</u></td><td></td><td></td></tr>
<tr><td>23</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சி குடிநீர் நிதி 2024–25ன்கீழ் வேதாரண்யம் சாலை பகுதியில் 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணிக்கு 26.07.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்தபுள்ளிதாரர் விபரம்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம் குறைவு/அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>M/S.RM Engineering Works, Coimbatore</td><td rowspan="2">498000/-</td><td>0.05% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/S.Mangaiyarkarasi Constructions, Thiruthuraipoondi</td><td>1.20% அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மதிப்பீட்டை விட 0.05% குறைவானதாகவும் உள்ள M/S.RM Engineering Works, Coimbatore என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. வரிசை எண்.1ல் கண்டுள்ள M/S.RM Engineering Works, Coimbatore என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.</td><td>411</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 3. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>**<u>ந.க.எண். 1616/2024/இ1</u>** | | |
| **24** | இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 300 வீடுகளுக்கு ஒரு மஸ்துர் வீதம் பணியாற்ற அனுமதிக்கப் பட்டுள்ளதன் அடிப்படையில், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 7286 வீடுகளுக்கு 25 மஸ்துர் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் The Karan Social Development Foundation மன்னார்குடி என்ற நிறுவனத்தின் மூலம் டெங்கு தடுப்பு பணிகள் இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 298 நாள் 04.03.2024ல் ஒப்புதல் பெறப்பட்டு, மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தக்காலம் 31.07.2024 உடன் முடிவடைவதால், பொதுசுகாதாரப் பிரிவின் அத்தயாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு மேலும் ஒரு மாத காலத்திற்கு (01.08.2024 முதல் 31.08.2024) வரை அதே விலை விகிதத்தில் ஒப்பந்தத காலத்தினை கால நீடிப்பு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,<br><br>**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**<br>(ந.க.எண் 3217/2023/எச்1) | **412** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |
| **25** | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் 2022–23ஆம் ஆண்டிற்கான தணிக்கை முடிவுபெற்று திருவாரூர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை உதவி இயக்குநர் அவர்களிடமிருந்து தணிக்கை அறிக்கைகள் மற்றும் தணிக்கை குறிப்புகள் வரப்பெற்றது, மேற்படி தணிக்கை அறிக்கைகள் மற்றும் தணிக்கை குறிப்புகள் அவற்றிற்குரிய பதில்கள் தொடர்புடைய பிரிவு எழுத்தர்கள் மூலம் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **413** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>2022-23ஆம் ஆண்டின் தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை குறிப்புகள், அவற்றிற்குரிய பதில்களை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>ந.க.எண் 78/2006/பி2 | | |

ஒம்/பா.கவிதா,
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/